**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுத் தீர்ப்பாயம்**

**மேட்டுப்பாளையம்,**

**முன்னிலை** : திரு. K. பழனிவேல், B.L,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

**2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 09 ம் நாள் திங்கட்கிழமை**

**எம்.சி.ஓ.பி. எண். 40/2022**

**CNR.NO.TNCB19000-159-2021**

1). திரு. கருப்பன் (இறந்தார்)

2). திருமதி. ராமத்தாள் (இறந்தார் )

3). திருமதி. கௌசல்யா, (25), க/பெ. லேட். வீரபத்திரன்

4). இளவர். பிரதீப் (4), த/பெ. லேட். வீரபத்திரன்

( இளவர் மனுதாரருக்காக அவரது தாயாரும், பாதுகாவலருமான 3 ம் மனுதாரர்)

3,4 மனுதாரர்களின் முகவரி 1/374, அம்மன் நகர், வெல்ஸ்புரம்,

நெல்லித்துறை, மேட்டுப்பாளையம், கோயமுத்தூர்

5). திருமதி. பிரவீணா (39), க/பெ. வெள்ளிங்கிரி,

முகவரி 4/370, காந்திமேடு, ஜல்லிமேடு, கருவலூர், அவினாசி, திருப்பூர் மாவட்டம்.

**.... மனுதாரர்கள்**

///**எதிர்**///

1). திரு. அசோக்குமார், (30), த/பெ. நாகராஜ்

முகவரி 315, சிங்காரதோப்பு, வெலிங்கடன், குன்னூர், நீலகிரி மாவட்டம்

2). திரு. முகமது அலி, (50), த/பெ. முஹம்மதியர்,

முகவரி 458/1, பிள்ளையார் கோவில் தெரு, லோயர் பஜார், ஊட்டி, நீலகிரி.

3). யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

ஊட்டி மெயின் ரோடு, மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் மாவட்டம்.

.... **எதிர்மனுதாரர்கள்**

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 05.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திருமதி. லட்சுமிகாந்தா அவர்கள் முன்னிலையாகியும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. C.V. பாலசந்திரன், அவர்கள் முன்னிலையாகியும், 1,2 ம் எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகததால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், இதுநாள் வரை இந்த தீர்ப்பாயத்தின் பரிசீலனையிருந்தும், இன்று இந்த தீர்ப்பாயம் வழங்கும்

## *உத்தரவு*

இம் மனுவானது, கடந்த 23.03.2020 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் திரு. வீரபத்திரன் என்பவர் இறந்ததற்காக ரூ. 30,00,000/- ம் இழப்பீடு வேண்டி மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 166- ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***01). Facts relating to the claim:***

| | |
|---|---|
| ***1). Claim for*** | ***- Deceased*** |
| ***2). Name of the Deceased person*** | ***-Veerabathiran*** |
| ***3). Age of the Deceased person*** | ***- 39*** |
| ***4). Occupation*** | ***- Building Labour*** |
| ***5). Income pleaded*** | ***- 26,000/-*** |
| ***6). Date of accident*** | ***- 23.03.2020*** |
| ***7). Insurance Policy Covered*** | ***- 17.11.2019 to 16.11.2020*** |

| | |
|---|---|
| *8). Driving License valid for offending vehicle* | *– 03.05.2000 to 27.07.2022* |
| *9). Compensation claimed* | *- 30, 00, 000/-* |
| *10). Date of petition presented* | *- 29.03.2021* |
| *11). Date of petition taken on file* | *- 08.06.2022* |

*02). மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-*

கடந்த 23.03.2020 அன்று விபத்தில் இறந்த வீரபத்திரனும், வெள்ளிங்கிரி என்பவரும் இரவு சுமார் 09.05 மணியளவில் தனக்கு சொந்தமான TN40Q5612 என்ற இரு சக்கர வாகனத்தில் அன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையில் குருக்கிலிபாளையம் வரதராஜன் என்பவரது பூமி அருகே சென்று கொண்டிருக்கும் போது, எதிர் திசையில் வந்த TN 43 D 2332 என்ற வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து இறந்தவர் ஓட்டிச் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். விபத்தில் காயமடைந்த திரு. வீரபத்திரனுக்கு சிறந்த சிகிச்சை அளிக்கப்பட்டும் சிகிச்சை பலனளிக்காமல் இறந்து விட்டார். விபத்தில் இறக்கும் பொழுது அவருக்கு வயது 31. விபத்தில் இறந்தவர் விபத்து சமயம் கட்டிட தொழிலாளியாக வேலை பார்த்து மாதம் ரூ. 26,000/- சம்பாதித்து வந்தார். மனுதாரர்கள் அவரது வருமானத்தை நம்பி வாழ்ந்து வந்தார்கள். ஆகவே, மனுதாரர்களுக்கு ரூ. 30,00,000/-ஐ இழப்பீடாக வழங்க எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட வேண்டும்.

*03). 3 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்*

மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் முற்றிலும் உண்மைக்கு மாறானவை. விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டுள்ளது. விபத்து சமயம் 1 ம் எதிர்மனுதாரருக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லை. மேலும், வாகனத்திற்கு பதிவு சான்றிதழ் இல்லை. மேலும், மனுதாரர்கள் பல்வேறு தலைப்புகளில் அதிகமான தொகையை

இழப்பீடாக கோரியுள்ளார்கள். ஆகவே, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

***04). இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய முக்கிய பிரச்சினைகள் பின்வருமாறு*** :-

(அ) இவ்வழக்கு விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டதா?

(ஆ) மனுதாரர்கள் இழப்பீடு பெறத்தக்கவர்களா? இழப்பீடு பெறத்தக்கவரெனில் எந்தெந்தலைப்புகளின் கீழ் எவ்வளவு இழப்பீடு பெறத்தக்கவர்கள்?

இ). மனுதாரர்களுக்கு எந்த எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர்?

05). 3ம் எதிர்மனுதாரர் தரப்பில், 2ம் எதிர்மனுதாரர் எடுக்க வேண்டிய அனைத்து எதிர்வாதங்களையும் 3ம் எதிர்மனுதாரர் எடுக்க அனுமதி வேண்டப்பட்டதன் பேரில் மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 170 ன் கீழ் அனுமதி வழங்கப்பட்டது.

06). மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 முதல் ம.சா. 3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு உள்ளார்கள். ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.18 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1 விசாரிக்கப்பட்டுள்ளார். 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ. 1 முதல் எ.ம.சா.ஆ. 3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**07). எழுவினா (அ) விற்கான விவாதமும் தீர்வும்**
**இவ்வழக்கு விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டதா**?

மனுதாரர்கள் தரப்பில் அவரது வழக்கறிஞர், விபத்தில் இறந்த திரு. வீரபத்திரனும், வெள்ளிங்கிரி என்பவரும்09.05 மணியளவில் தனக்கு சொந்தமான TN40Q5612 என்ற இரு சக்கர வாகனத்தில் அன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையில் குருக்கிலிபாளையம் வரதராஜன் என்பவரது பூமி அருகே சென்று கொண்டிருக்கும் போது, எதிர் திசையில் வந்த

TN43D2332 என்ற வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து இறந்தவர் ஓட்டிச் சென்ற வாகனத்தின் மீது மோதியதில் கொடுங்காயம் ஏற்பட்டு சிறந்த சிகிச்சை அளிக்கப்பட்டும் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் ஆகையால், மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்குமாறு மனு தாக்கல் செய்து வாதிட்டார்.

08). எதிர்மனுதாரர் தரப்பில் அவரது வழக்கறிஞர்கள், விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டுள்ளது. விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாரருக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லை. மனுதாரர்கள் அதிகமான தொகையை இழப்பீடாக கோரியுள்ளார்கள்.

09). மேற்கண்ட இரு தரப்பு வாதுரைகளையும், வழக்கு ஆவணங்களையும் கவனமாக பரிசீலனை செய்ததில் கடந்த 23.03.2020 அன்று அன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையில் வைத்து 1ம் எதிர்மனுதாரர் ஓட்டிச் சென்ற வாகனம் மோதியதில் திரு. வீரபத்திரன் இறந்துள்ளார் என்பதும் 2ம் எதிர்மனுதாரரின் வாகனம் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதென்பதும் இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளாகும்.

10). விபத்தை கண்ணுற்ற சாட்சியான ம.சா.2 தனது சாட்சியத்தில் கடந்த 23.03.2020 அன்று விபத்தில் இறந்த வீரபத்திரனும், வெள்ளிங்கிரி என்பவரும் இரவு சுமார் 09.05 மணியளவில் தனக்கு சொந்தமான TN40Q5612 என்ற இரு சக்கர வாகனத்தில் அன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையில் குருக்கிலிபாளையம் வரதராஜன் என்பவரது பூமி அருகே சென்று கொண்டிருக்கும் போது, எதிர் திசையில் வந்த TN 43 D 2332 என்ற வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து

இறந்தவர் ஓட்டிச் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக தனது சாட்சியத்தை முன் வைத்துள்ளார். மேற்படி சாட்சியத்தை 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்திருந்த போதிலும் 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பதை எவ்வகையிலும் விலக்கும் வகையில் இல்லை. ஆகவே, மேற்கண்ட அனைத்து பொருண்மைகளையும் ஒன்றிணைத்து பரிசீலனை செய்ததிலிருந்து இந்த விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டதென இந்த தீர்ப்பாயம் முடிவிற்கு வருகிறது.

**11). <u>எழுவினா (ஆ) விற்கான விவாதமும் தீர்வும்</u>**

**<u>மனுதாரர் இழப்பீடு பெறத்தக்கவர்களா ? இழப்பீடு பெறத்தக்கவர்களெனில் எவ்வளவு இழப்பீடு கிடைக்கதக்கது ?</u>**

வழக்கு விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவே காரணமென இந்த தீர்ப்பாயம் முடிவிற்கு வந்துள்ளதால் விபத்தில் திரு. வீரபத்திரன் இறந்ததற்காக, மேற்கண்ட இறந்த வாரிசுகளான 3 மற்றும் 4ம் மனுதாரர்களான அவரது மனைவி மற்றும் மகன் ஆகியோர்கள் இழப்பீடு பெறத்தக்கவர்கள் எனவும், மேலும், இந்த வழக்கில் 5ம் மனுதாரராக இறந்தவரின் சகோதரி தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். மேலும், 5ம் மனுதாரர் இறந்தவரின் வருமானத்தை நம்பி வாழ்ந்ததாக மனுதாரர் தரப்பு சாட்சியத்திலிருந்து வெளிப்படவில்லை. மேலும், நமது மாண்புமிகு உச்ச நீதிமன்றம், ***2025 INSC 675*** என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளது.

***2025 INSC 675***
***In the Supreme Court of India***
***Dated 13 May, 2025***

DeeP Shikha and another …Appellants

- vs-

National Insurance Company Ltd ... Respondents

என்ற வழக்கில் பத்தி 13- ல்

> *Once a daughter is married, logical presumption is that she now has rights on her matrimonial household and is also financially supported by her husband or his family, unless proven otherwise. It is more than likely that her dependence on her natal family, including her mother has now ceased.Sections 166 and168 of the Motor Vehicles Act, 1988 focus on the financial relationship between the deceased and the Claimant. A married daughter may be considered a legal representative, as per Manjuri Bera, but she will not be eligible for loss of dependency compensation unless it is proven by the daughter that she was financially dependent on the deceased. Thus, it is clear from the record that Appellant No. 1 has failed to prove that she was being financially supported by her mother post marriage and hence cannot be said to be a dependent of her mother, the deceased.*

என்று தெரிவித்துள்ளது. இந்த வழக்கிலும், 5ம் மனுதாரர் திருமணமாகி தனது கனவர் வீட்டில் வசித்து வருகிறார். மேலும், 5ம் மனுதாரரின் பெற்றோர்களும் இறந்துவிட்டார்கள். மேலும், மேற்கண்ட 5ம் மனுதாரர் இறந்தவரின் வருமானத்தை நம்பி வாழ்ந்ததாக மனுதாரர் தரப்பு சாட்சியத்திலிருந்து வெளிப்படவில்லை. மேற்கண்ட நமது மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பின் பொருண்மையும், இவ்வழக்கின் பொருண்மையும் பொருந்தும் வகையில் உள்ளதால், இம்மனுவின் 3 மற்றும் 4ம் மனுதாரர்கள் மட்டுமே இழப்பீடு பெற உரிமையுடையவர்கள் என்று இந்த தீர்ப்பாயம் முடிவிற்கு வருகிறது.

12). மேலும், இழப்பீட்டை நிர்ணயம் செய்ய இறந்த திரு. வீரபத்திரனின் வயது மற்றும் வருமானத்தை நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது. இறந்த வீரபத்திரனின் வயதைப்

பொறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை. மேலும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் இறந்தவரின் வயது 31 என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.14 சான்றாவணமான இறப்பு சான்றிதழில் இறந்தவரின் வயது 32 என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, திரு. வீரபத்திரன், விபத்தில் இறக்கும் போது வயது 32 என இந்த தீர்ப்பாயம் முடிவிற்கு வருகிறது. அவர் கட்டிட தொழிலாளியாக வேலை பார்த்து மாதம் ரூ. 26,000/- சம்பாதித்து வந்ததாக மனுதாரர்களால் உரைக்கப்பட்டுள்ளதே தவிர அதை உரிய சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் இந்த தீர்ப்பாயத்தில் நிரூபிக்கவில்லை.

13). இருப்பினும், 32 வயதான ஒரு ஆண் ஏதேனும் ஒரு கூலி வேலைக்கு சென்றிருந்தாலும் தினம் ரூ. 700/- ஆவது சம்பாதித்து இருந்திருப்பார். ஆகவே, இறந்த வீரபத்திரனின் உத்தேச மாத வருமானம் ரூ.17,500/- என இந்த தீர்ப்பாயம் நிர்ணயம் செய்கிறது. இறந்த வீரபத்திரன் கட்டிட தொழிலாளியாக வேலை பார்த்து வந்தவர் என்பதாலும் அவரது வயது 32 என்பதாலும் ***National Insurance company Limited – Vs- Pranay sethi and others.*** என்ற முன் தீர்ப்பு நெறியில் வருங்கால வருமான அதிகரிப்பிற்காக கூடுதலாக 40% கணக்கில் கொள்ள வேண்டுமென மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதால், மேற்கண்ட வருமானத்திலிருந்து மேலும் கூடுதலாக 40% த்தை கூடுதலாக கணக்கில் கொள்ளலாமென்றும் இந்த தீர்ப்பாயம் முடிவிற்கு வருகிறது.

14). வீரபத்திரன் இறந்ததன் மூலம் அவரது குடும்பத்திற்கு ஏற்பட்ட வருமான இழப்பை நிர்ணயம் செய்ய பயன்படுத்தப்படும் காரணிகள் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| i) | இறந்த வீரபத்திரனின் வயது | --- | 32 |
| ii) | இறந்த வீரபத்திரனின் வருமானம் | --- | ரூ. 17,500 /- (மாதம் ஒன்றுக்கு ) |
| Iii). | வருங்கால வருமான அதிகரிப்பிற்காக மாதமொன்றுக்கு | --- | 17,500 x 40%<br>= 7,000 /- |
| iv) | பெருக்கல் காரணி | -- | 16 |
| v) | வருமானத்தில் இறந்த நபரின் சொந்த செலவிற்காக குறைக்க வேண்டியது | --- | மூன்றில் ஒரு பாகம் |
| இறந்த வீரபத்திரனின் குடும்பத்திற்கான வருமான இழப்பு | | -- | 24,500/-(17,500 + 7,000)x12x16 x 2/3<br>= 31,36,000/- |

16. மேற்கண்ட தலைப்பல்லாமல் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் ***National Insurance company Limited – Vs- Pranay sethi and others.*** என்ற முன் தீர்ப்பு நெறியில் நெறியுறுத்தப்பட்டுள்ளவாறு சொத்து இழப்பிற்காக ரூ 16,500/- அன்பு மற்றும் பாச இழப்பிற்காக தலா ரூ. 44,000/- இறுதி சடங்கிற்காக ரூ. 16,500/- இழப்பீடாக வழங்கலாமென இந்த தீர்ப்பாயம் முடிவிற்கு வருகிறது.

17.என்னென்ன தலைப்புகளின்கீழ் எவ்வளவு இழப்பீடென இந்நீதிமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட இழப்பீட்டு தொகை விபரம் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| (1) | வருமான இழப்பு | : | 31,36,000/- |
| (2) | சொத்து இழப்பிற்காக | : | 16,500/- |
| (3) | அன்பு மற்றும் பாச இழப்பிற்காக (2x 44,000) | : | 88,000/- |

| | | | |
|---|---|---|---|
| (4) | இறுதி சடங்கிற்காக | : | 16,500/- |
| | மொத்தம் | : | ரூ.32,57,000/- |

***18). மனுதாரர்களுக்கு எந்த எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர்?***

2ம் எதிர்மனுதாரரின் வாகனம் 3ம் எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்படவில்லை என்றோ, 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு விதிமுறைகளை மீறி நடந்தாரென்றோ, 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித எதிர்வாதமும் முன் வைக்கப்படாததால் மனுதாரருக்கு செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகையை 2ம் எதிர்மனுதாரருக்காக வேண்டி 3ம் எதிர்மனுதாரர் செலுத்த கடமைப்பட்டவரென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருவது தான் நீதியின்பால் சிறந்ததாக இருக்கும்.

***19). இறுதியாக,***

*1) மனுதாரர்களுக்கு ரூ.32,57,000/- ஐ இழப்பீடாக வழங்கவும் மேற்கண்ட இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்த 29.03.2021 முதல் தொகையை வைப்பீடு செய்யும் தேதிவரை, ஆண்டொன்றிற்கு 7.5% வட்டி வழங்கவும் வழக்குரைஞர் கட்டணம் மற்றும் நீதிமன்ற கட்டணத்திற்கான தொகையை செலவுத் தொகையாக வழங்கவும் 3ம் எதிர்மனுதாரருக்கு ஆணையிடப்படுகிறது. மேலும், மனுதாரருக்கான இழப்பீட்டுத் தொகையை 1 மாத காலத்திற்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டுமென 3ம் எதிர்மனுதாரருக்கு ஆணையிடப்படுகிறது. மேலும், இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டிருந்த காலமான 09.11.2023 முதல் 30.01.2025 வரையிலான காலத்திற்கு இழப்பீட்டு தொகைக்கு எவ்வித வட்டியும் 3ம் எதிர்மனுதாரர் செலுத்த தேவையில்லை என உத்தரவிடப்படுகிறது.*

02). மேற்படி இழப்பீட்டுத் தொகையை பாரத ஸ்டேட் வங்கி **IFSC Code : SBIN0004266**, Virtual Account - **MTPSUB-** - ல் செலுத்த ஆணையிடப்படுகிறது. தொகை செலுத்தப்பட்ட விபரத்தை தீர்ப்பாயத்தின் cbemtp.sc-tn@indiancourts.nic.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப ஆணையிடப்படுகிறது.

03) 3 ம் எதிர்மனுதாரரால் மேற்படி தொகையை வைப்பீடு செய்யும் பட்சத்தில் 3 ம் மனுதாரருக்கு ரூ. 20,57,000/ ம் அதற்கான வட்டி மற்றும் செலவுத்தொகையும் வழங்க உத்தரவிடப்படுகிறது. மேலும், 4 ம் மனுதாரருக்கு ரூ. 12,00,000/ ம் அதற்கான வட்டி மற்றும் செலவுத்தொகையும் வழங்க உத்தரவிடப்படுகிறது. மேலும், 4 ம் மனுதாரர் இளவராக இருப்பதால் உரிய வயதை அடையும் வரை அவருக்கான இழப்பீட்டுத் தொகையை ஏதேனும் ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் நிரந்தர வைப்பீட்டில் வைக்க ஆணையிடப்படுகிறது. மேலும், மேற்கண்ட தொகையை 3 ம் எதிர்மனுதாரரால் வைப்பீடு செய்யும் பட்சத்தில் உரிய மனுவின் பெயரில் 3 ம் மனுதாரரின் வங்கி கணக்கிற்கு மாறுதல் செய்ய ஆணையிடப்படுகிறது.

4). நீதிமன்ற கட்டணம் முறையே ரூ. 31,942/-ஐ செலுத்த வேண்டும் வழக்குரைஞர் கட்டணமாக ரூ. 41,070/- **TamilNadu Legal Authority Act Circular dated 17.10.2016 and Rule 25 (6) of Tamilnadu Motor Vehicles Accident Claims Tribunals Rules 1989** - ன் படி நிர்ணயம் செய்யப்படுகிறது. உத்தரவின் நகலை (இலவச நகல் உள்ளிட்ட ) முழு நீதிமன்றக் கட்டணத்தையும் செலுத்திய பிறகு மனுதாரருக்கு அளிக்க ஆணையிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதை, பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 09 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய

பகரப்பட்டது.

Sd/- K. பழனிவேல்,
மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயம்
மற்றும் சார்பு நீதிமன்றம் , மேட்டுப்பாளையம் .

**1). மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் பட்டியல் :-**

| வ. எண் | சாட்சி பெயர் | சாட்சிய வரிசை |
|---|---|---|
| 1). | திருமதி. கௌசல்யா | ம.சா.1 |
| 2). | திரு.வெள்ளிங்கிரி | ம.சா.2 |
| 3). | திரு. மனோகரன் | ம.சா 3 |

**2). மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் : -**

| வ. எண் | தேதி | சான்றாவண விபரம் | ஆவண வரிசை | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|---|
| 1 | --- | கௌசல்யா என்பவரின் ஆதார் அடையாள அட்டை | ம. சா. ஆ.1 | நகல் |
| 2 | --- | இளவர் பிரதீப்பின் ஆதார் அடையாள அட்டை | ம. சா. ஆ.2 | நகல் |
| 3 | --- | 5 ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை | ம.சா. ஆ.3 | நகல் |
| 4 | --- | 4 ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் | ம.சா. ஆ.4 | நகல் |
| 5 | --- | முதல் தகவல் அறிக்கை | ம. சா. ஆ.5 | நகல் |
| 6 | --- | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | ம. சா. ஆ.6 | நகல் |
| 7 | --- | இறுதி அறிக்கை | ம. சா. ஆ.7 | நகல் |
| 8 | --- | TN43D2332 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | ம. சா. ஆ.8 | நகல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | --- | பார்வை மகஜர் | ம. சா. ஆ 9 | நகல் |
| 10 | --- | மாதிரி வரைபடம் | ம. சா. ஆ 10 | நகல் |
| 11 | --- | கருப்பன் என்பவரின் இறப்பு சான்றிதழ் | ம. சா. ஆ 11 | நகல் |
| 12 | --- | ராமத்தாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் | ம. சா. ஆ 12 | நகல் |
| 13 | --- | ராமாத்தாளின் வாரிசு சான்றிதழ் | ம. சா. ஆ 13 | நகல் |
| 14 | --- | வீரபத்திரனின் இறப்பு சான்றிதழ் | ம. சா. ஆ 14 | நகல் |
| 15 | --- | வீரபத்திரனின் வாரிசு சான்றிதழ் | ம. சா. ஆ 15 | நகல் |
| 16 | --- | வெள்ளிங்கிரி என்பவரின் ஆதார் அடையாள அட்டை | ம. சா. ஆ 16 | நகல் |
| 17 | --- | TN 40Q5612 என்ற வாகனத்தின் பதிவு சான்றிதழ் | ம. சா. ஆ 17 | நகல் |
| 18 | --- | மனோகரன் என்பவரின் ஆதார் அடையாள அட்டை | ம. சா. ஆ 18 | நகல் |

**3). எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள்**

| வ. எண் | சாட்சி பெயர் | சாட்சிய வரிசை |
|---|---|---|
| | --- இல்லை -- | |

**4). எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** :-

| வ.எண் | தேதி | சான்றாவணங்கள் | ஆவண வரிசை | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|---|
| | | --- இல்லை -- | | |

Sd/- K. பழனிவேல்,

**மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயம்**
**மற்றும் சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம் .**

*எம்.சி.ஓ.பி. எண். 40/2022*

*09.03.2026*

***சீரான உத்தரவு***